# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 43வது கூட்டறிக்கை 2021.09.14

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 43வது அமர்வு 2021.09.14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 18. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 19. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 43வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் சுகயீனம் மற்றும் பிரயாணத்தடை காரணமாகவும் இந்த சபைக்கு சமூகமளிக்க முடியாது என்றும், அவருக்கு விடுமுறை வழங்குமாறும் அறிவித்தல் விடுத்திருக்கின்றார். இதை சபையின் அனுமதியோடு செயலாளரை உள்ளூராட்சி திணைக்களத்தின் அறிவுரைக்கமைய இதை செயற்படுத்துமாறு கட்டளையிட்டவனாக,

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே, மிகவும் ஆபத்தான சூழலில் கூட்டங்களை நாம் சட்டரீதியாக கூட்ட வேண்டும், அனுமதிகளை பெற வேண்டும் என்பதற்காக கூட்டுகின்றோம். அதற்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றது. அதில் முக்கியமாக இவ்வாறு கூடும் போது குறுகிய காலத்திற்குள் கூட்டங்களை முடிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடும் இருக்கின்றது. உங்களுக்கு ஏற்கனவே அறிவித்தவாறு இந்த கூட்டத்தை உரிய கால எல்லைக்குள் முடிப்பதற்கு உங்களின் உதவியை நாடுகின்றேன்.

அரசாங்கம் பொது செலவுகளைப் பற்றி முடிவு எடுத்திருக்கின்றது. செப்டெம்பர் முதலாம் திகதியில் ஆரம்பிக்கப்படாத எந்தவொரு வேலையையும் தொடரக்கூடாது என்று அறிவித்திருக்கின்றனர். அதனடிப்படையில் சில நமக்கு அனுமதி தரப்பட்ட சில வேலைத்திட்டங்கள் நடைபெறாமல் இருக்கலாம். உதாரணமாக கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் வீதி லாம்புகளுக்கு ஒரு ஒதுக்கீடு பெற்றிருந்தார். வீரமுனைக்கும் வீதி லாம்புகள் அமைச்சினால் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் அது கொள்வனவு செய்யப்படமாட்டாது என்றுதான் எனக்கு அறிவித்தல் வந்திருக்கின்றது. CLG மீண்டும் அமைச்சுக்கு அனுமதி கேட்டு எழுதி இருக்கின்றார்கள். அது வரும் பட்சத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

அதே மாதிரி Night Soil Treatment Plant, இதற்கும் இறுதி நேரத்தில்தான் அனுமதி வந்தது. இது 10 மில்லியனிற்குரிய திட்டம். அதையும் உள்ளூராட்சி ஆணையாளர் அமைச்சிடம் அனுமதி கேட்டிருக்கின்றார்.

UNDP LDSP திட்டத்தின் கீழ் ஒவ்வொரு காரியாலயத்திலும் மக்கள் வருகைதந்து அவர்களின் தேவைகளை ஒரே இடத்தில் பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் ஒரு Front Office உருவாகுவதற்காக 13 உள்ளூராட்சி மன்றங்கள் தெரிவுசெய்யப்பட்டதில் சம்மாந்துறையும் ஒன்று. அந்த வேலைத்திட்டம் இன்ஷா அல்லாஹ் இறைவனின் நாட்டத்தோடு ஒக்டோபர் மாத முடிவுக்குள் பூர்த்தி செய்யலாம் என நினைக்கின்றேன். இறுதி அனுமதி இன்றைக்கு வரலாம் என எதிர்பார்க்கின்றோம். நேற்றும் இதைப் பற்றி Zoom கூட்டம் நடைபெற்றது.

அதே போல் முன்பு நாம் பேசியவாறு அரசாங்கம் உத்தியோகபூர்வமாக கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், பிரதேச செயலக எல்லைகளுக்கான எல்லை நிர்ணயக் குழு அங்கத்தவர்களை நியமித்து இருக்கின்றார்கள். அவர்கள் இந்தக் கிழமை கூடுகின்றார்கள். நான் அந்த அங்கத்தவர்களோடு பேசிய போது அவர்கள் கூடி என்ன என்ன அடிப்படையில் இது செய்யப்படும் என்பதை பொதுவாக அறிவித்து, மக்களிடம் முன்மொழிவுகளை கேட்பார்கள். அப்போது நான் முன்பு கூறியவாறு இந்த சபையில் நாம் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பதால், நாமும் ஒரு முன்மொழிவு கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அந்த விபரங்கள் எல்லாம் உங்களிடம் இருக்கின்றது. காலம் செலவளித்து உங்கள் பகுதியில் வாழ் மக்களோடு சேர்ந்து ஆலோசித்து ஆக்கபூர்வமான முன்மொழிவுகளை செய்யும் பட்சத்தில் நாம் கூடி அதை தீர்மானித்து ஒழுங்குபடுத்தலாம். இந்த மாத இறுதிக்குள் செய்து எடுப்பது நல்லது. கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் ஏற்கனவே சில குறிப்புகளை கூறியிருந்தார். அதே போல் உங்களது வட்டாரங்களில் ஆழமாக சென்று அந்த குழு என்ன செய்ய முயற்சிக்கின்றது? அதற்கு ஏற்ற மாதிரி செய்தால்தான் அதில் வெற்றி பெறலாம். அதை ஆக்கபூர்வமான முறையில் செய்ய வேண்டும். இன்னும் 15 வருடத்தில் எமது ஊர் எப்படி இருக்க வேண்டும் என்ற ரீதியில் நாம் சிந்தித்து அம் முன்மொழிவுகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

தயவு செய்து எல்லோரும் உங்களின் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுங்கள். 03வது Dose உம் வரும் போல் இருக்கின்றது. மாணவர்களுக்கும் தடுப்பூசிகள் ஏற்ற வேண்டிய தேவை இருப்பதாக சுகாதார நிபுணர்கள் அறிவிக்கின்றார்கள். அதனால் நாம் முன்மாதிரியாக சமூக இடைவெளி பேணி, சுகாதார வழிமுறைகளுக்கு ஏற்ப நமது நடவடிக்கைகளை எடுப்போமானால் அது ஆரோக்கியமாக இருக்கும். சம்மாந்துறையை பொருத்தவரையில் அது எந்தளவுக்கு பேணப்படுகின்றது என்பது கேள்விக்குறி.

அடுத்ததாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொது நிர்வாகம் 100 இல் 18வது கல்முனை மேல் நீதிமன்ற தாக்கல் செய்யப்பட்ட சட்டத்தரணிக்கான கொடுப்பனவு. அது எந்த வழக்கு?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்த வழக்கு நீங்கள் சுட்டிக்காட்டிய காணி வழக்கு. சபைக்கும் தவிசாளருக்கும் எதிராக நளீம் இனால் தொடரப்பட்ட வழக்கு.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்மந்தமாக 02 மாதத்திற்கு முன்னர் உங்களிடம் வந்து விணவிய போது பிரதேச செயலகத்தை வழக்கு போட்டதாக கூறினீர்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பிரதேச சபைக்குத்தான் வழக்கு போட்டிருக்கின்றது. பிரதேச செயலகம் அந்த வழக்கில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். அரச காணிக்கு பொறுப்பானவர்கள் பிரதேச செயலகம். வசதிகளை செய்ய வேண்டியது பிரதேச சபை. வழக்கு பிரதேச சபைக்கு எதிராக போடப்பட்டது.

**தீர்மானம் - 04/43/01**
சென்ற மாதம் 2021.08.01 தொடக்கம் 2021.08.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம்.சஹீல் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வருமானம் இல்லாமல் சென்ற மாதத்திற்குரிய சம்பளம் கொடுப்பதற்கு நமது இருப்பில் இருந்து பணம் மாற்றப்பட்டது. நான் ஆரம்பத்தில் கூறியது போல் நமது காலத்திற்குள் எப்படியாவது ஊழியர்களின் சம்பளத்தில் கை வைக்காமல் போகக்கூடிய சந்தர்ப்பத்தை இறைவன் நமக்கு வழங்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடு செயற்பட வேண்டும். சில அத்தியவசிய தேவைகள் நிறைவேற்றத்தான் வேண்டும். நமது காலத்தில் 04 வருடத்தில் 02 வருடம் கொரோனாவோடு செல்கின்றது. 02 வருடத்திற்குள்ளும் பெரிதாக அபிவிருத்தி செய்யவில்லை என்றாலும் நமது அடிப்படை கடமைகளை ஒழுங்காக மக்கள் திருப்திப்படக்கூடிய விதத்தில் செய்திருக்கின்றோம் என்ற பெருமையுடன் நமக்கு இன்னும் 05 மாதங்கள் இருக்கின்றது. அந்த காலத்தை சமாளிக்க போதிய நிதி இருக்கும் என்று நினைக்கின்றேன்.

Front Office இன் Concept என்னவென்றால் ஒரு நபர் எல்லா பிரிவுகளிற்கும் செல்லாமல் Reception இற்கு வந்து ஒரு முறைப்பாட்டை கொடுத்தால் அந்த முறைப்பாட்டை எடுத்து அவருக்கு ஒரு பதிவு எண் கொடுத்து அதன் வேலையை Front Office மூலமாக செய்து அவருக்கு அறிவித்தல்

கொடுக்கலாம். மின்விளக்கு வேலை செய்யவில்லை என்றால் அவர்கள் பதிந்து ஒரு பதிவு எண் தருவார்கள். அடுத்த முறை தொலைபேசி மூலம் அந்த பதிவு எண்ணை சொன்னால் அதன் முன்னேற்றம் என்னவென்று அவ் இடத்தில் இருந்து மறுமொழி கொடுக்க வேண்டும். பல தனியார் நிறுவனங்களில் நடைபெறுகின்றது. தற்போது அரச நிறுவனங்களிலும் நடக்கின்றது. பிரதேச சபைகளில் சம்மாந்துறை தான் முதன்மை சபையாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. நமது பிரதேச சபையில் கிட்டத்தட்ட 08 இலட்சத்திற்கு Full Data and Voice wiring நடக்கின்றது. அலுவலகம் முழுவதும் Network ஆக மாறுகின்றது. அடுத்தது MANKIWWA Software ஒன்று உள்ளூராட்சி மன்றங்களில் பாவிக்கப்படுகின்றது. அதாவது ஹிஜ்ரா சந்தியில் குப்பை இருக்கின்றது என்றால் அவ்விடத்தை அந்த App மூலமாக படம் எடுத்து அனுப்பினால் சபையின் System இற்கு ஒரு முறைப்பாடாக வரும். அந்த முறைப்பாடு ACLG, CLG, அமைச்சுக்கும் செல்லும். அப்படியான ஒரு System உருவாக்குவதற்கு நாம் தெரிவு செய்யப்பட்டது நமது நல்ல நேரம் என்று நினைக்கின்றேன். நேற்று அதன் இறுதிக் கூட்டம் நடைபெற்றது. இன்றைக்கு அதன் அனுமதி வரலாம்.

**தீர்மானம் - 04/43/02**

LDSP செயற்திட்டத்தின் கீழ் UNDP நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் உப திட்டமான:

1. CDLG/PPTA திட்டங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ள பிரதான அலுவலகத்திற்கான Front Office/ Call Centre,
2. திண்மக் கழிவு முகாமைத்துவம் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி தொடர்பான செயற்பாட்டிற்கு உதவுதல்,
3. மக்கள் முறைப்பாடு செய்வதற்காக MANKIWWA (நான் சொன்னேன்) எனும் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/43/03**

மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட பின்வரும் வேலைகளை செய்வதற்கான பிரேரணை.

1. Improvement of Ayurvedic Hospital Building in Sennel Kiramam – 01 Sammanthurai. Rs.240,000.00
2. The expense necessary to be incurred for construction of boundary wall with security hut at Ayurvedic hospital in sennal Kiramam – 01 Sammanthurai – Rs.2,000,000.00

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ ஆளுநரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கான மேன்பாட்டு திட்டத்தின் கீழ் 10 இலட்சம் தருவதாக கூறி இருக்கின்றார்கள். தற்போது அதில் 05 இலட்சம் உடனடியாகவும், நாம் செலவு செய்த பின் மீதி தருவதாகவும் அறிவித்திருக்கின்றார்கள். பழையதை திருத்துவதோடு இன்னும் ஒரு அரிதட்டும் வாங்குவதற்கான முன்மொழிவை செய்திருக்கின்றோம்.

**தீர்மானம் - 04/43/04**

கௌரவ ஆளுநரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சேதனப் பயளை உற்பத்தி செய்வதற்கான மேன்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரிதட்டு கொள்வனவு செய்வதற்கும், உள்ளதை திருத்துவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

02 டம்ரக் இற்கும் டயர் மாற்ற வேண்டும். ஒன்று 2017ம் ஆண்டு மாற்றியது, மற்றயது 2019ம் ஆண்டும் மாற்றப்பட்டது.

**தீர்மானம் - 04/43/05**

LL – 6939 இலக்க டம்ரக் இயந்திரத்திற்கு 06 டயர்களும், LI – 3269 இலக்க கொம்பக்டர் இயந்திரத்திற்கு 06 டயர்களும் கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இன்று சேதனப் பசளைக்கு ஒரு கிராக்கி இருக்கின்றது. ஆனால் சேதனப் பசளையை நாம் வீட்டுத்தோட்ட மட்டத்தில் செய்வது என்றால் அதை தூவலாம். ஆனால் வயலுக்குள் வீசுவது என்றால் அதை Pellet ஆக மாற்ற வேண்டும். அதற்குரிய இயந்திரம் ஒன்று சீனாவில் இருக்கின்றது. 04 இலட்சத்திற்கு எடுக்கலாம். நாங்கள் 2, 3 Model தேடிக்கொண்டு இருக்கின்றோம். அப்படி ஒரு வசதியான ஒரு நாளைக்கு 2000Kg செய்யக்கூடிய இயந்திரம் ஒன்று இருந்தால் சில நிறுவனங்கள் செய்கின்றார்கள். நாமும் செய்யாவிட்டால் பயளை வீசுவது போன்று வீச இயலாது. Pellet வடிவத்திற்கு மாற்றுவதற்கு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்கு உங்களின் முன் அனுமதியை கேட்கின்றேன். அதன் விலை கிடைத்தவுடன் மீண்டும் உங்கள் அனுமதியைப் பெறுவேன்.

**தீர்மானம் - 04/43/06**

எமது சபையினால் தயாரிக்கப்படும் சேதனப் பசளையினை Pellet வடிவத்தில் மாற்றுவதற்குரிய இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எம்.முஸ்தபா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

விலங்கு அறுமனையில் ஒரு கிணறு தோன்றி இருக்கின்றோம். அது வெற்றிகரமாக வரவில்லை. Water Board அந்த பணத்தை நமக்கு Refund பண்ணுகின்றது. ஆனால் அதில் இருக்கின்ற தண்ணீர் ஒரு நிமிடத்திற்கு இத்தனை அடி தண்ணீர் வர வேண்டும் என்ற நியம அளவு இருக்கின்றது. அதை அடையாவிட்டால் அவர்கள் 60 அல்லது 50 வீதத்தை தருவார்கள். அந்த நீரை பாவிக்கலாம். அதற்கு ஒரு மோட்டரினை பொருத்தி அந்த நீரை பயளை தயாரிப்பதற்கு பாவிப்போமானால் பிரயோசனமாக இருக்கும். அதற்கு ஒரு மோட்டரும் அதற்கு தேவையான ஏனைய பொருட்களும் கொள்வனவு செய்வதற்கு உங்களது அனுமதியை கேட்கின்றேன்.

**தீர்மானம் - 04/43/07**

விலங்கு அறுமனையில் உள்ள கிணற்று நீரை பயன்படுத்தி சேதனப் பசளை தயாரிப்பதற்காக அக் கிணற்றிற்கு மோட்டர் கொள்வனவு செய்து பொருத்துவதற்கும், அதற்கு தேவையான ஏனைய பொருட்களை கொள்வனவு செய்வதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அனுபவத்தில் சொல்கின்றேன், அசாதாரண சூழ்நிலைகளில் நமக்கு தேவையான ஒரு மாதத்திற்குரிய டீசல், Oil இரண்டையும் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி, செயலாளரின் விசேட அனுமதி இல்லாமல் எடுப்பதற்கு கட்டுப்பாடு விதிப்போம். நாட்டில் டீசல் இல்லாவிட்டாலும் ஒரு மாதமோ அல்லது இரண்டு மாதமோ நமது சேவைகளை செய்யக்கூடியதாக இருக்கும். ஆகப்பெரிய டீசல் செலவீனம் திண்மக் கழிவு முகாமைத்துவம், அதை கிட்டத்தட்ட 90% வெற்றிகரமாக செய்கின்றோம். அதை செய்வதற்கு நமக்கு அந்த தடை வரக்கூடாது. நமக்கு இருக்கின்ற தடை, வாகனங்களின் பராமரிப்பு. 20 வருடத்திற்கு மேற்பட்ட வாகனங்களும் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு நாளைக்கு தேவைப்படும் டீசலின் அளவு எவ்வளவு?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு 2000 Lit தேவைப்படும்.

**தீர்மானம் - 04/43/08**

அசாதாரண சூழ்நிலைகளில் சபையில் பயன்படுத்தும் வாகனங்களுக்கு ஒரு மாதத்திற்கு தேவையான எரிபொருட்களை (Diesel, Oil) கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களின் வழிகாட்டலோடுதான் பேச வேண்டும். 02 விடயம் உயர் நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கும், மாவட்ட நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கை பற்றியும் நாம் சபையில் உத்தியோகபூர்வமாக அதை பேசலாமா அல்லது குழு நிலைக்கு சென்று பேசலாமா, ஹன்சார்ட் இல் வருவது நீதிப்படி சரியா என்று நீங்கள் உங்களது கருத்துக்களை கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸ்தபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அண்மையில் நாங்கள் கண்ட விடயம்தான் அகில இலங்கை மக்கள் காங்கிறஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் அவர்கள் கைது செய்யப்பட்டு கைதில் இருக்கின்ற அதே சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டார். பாராளுமன்றம் சட்டம் இயற்றும் சபை. நீதித் துறை, நிர்வாகத்துறை, சட்டவாக்க துறையில் பாராளுமன்றத்தில் வந்திருந்து பாராளுமன்ற சிறப்புரிமையோடு சேர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் ஒரு கட்சித் தலைவர் தனக்கு இடம்பெற்றிருக்கின்ற தன்னுடைய கைது சம்மந்தமாக பேசப்படுகின்ற போதே ஒரு நீதவான் நீதிமன்றத்தில் தனது கைதுக்கு எதிராக நான் சட்டமான முறையில் இல்லை என்ற விடயத்தை முன்வைத்த போது அங்குள்ள அமைச்சர் ஜோன்சன் உட்பட அத்தனை பேரும் இது ஒரு நீதிமன்ற விடயத்தை பேசுவதற்கான இடம் இல்லை. என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையில் நீதிமன்றத்தில் விளக்கத்தில் இருக்கின்ற விளக்கம் சம்மந்தமாக அல்லது நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டிருந்தாலும் கூட அது சம்மந்தமாக கருத்துரைப்பது நீதிமன்றத்தை அவமதிப்பதாக கொள்ளப்படும்.

கௌரவ தவிசாளர் அவர்கள் கூறியது போன்று ஒரு வழக்கானது கல்முனை மேல் நீதிமன்றத்தில் இருந்து கொண்டிருக்கின்றது. அதன் மறுமொழி அறிவிக்கப்பட்டு இன்றைக்கு விவாத நிலையிலும் அதில் மேலதிகமாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஒரு திறத்தால் உள்வாங்கப்பட்டு அதில் உள்ள உத்தியோகத்தர்கள் அவர்கள் பணிக்கப்பட்டு கருத்துகள் எடுக்கப்பட்டு இன்றைக்கு அவ் வழக்கு ஒரு முடிவு தருவாயை எட்டிய வகையில் கொரோனா பிரச்சினை இல்லாமல் இருந்திருந்தால் பெரும்பாலும் அந்த வழக்கு முடிவுக்கு கொண்டு வருவதாக இருந்திருக்கும். உயர் நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கு சம்மந்தமாக பேசுவதற்கு அல்லது கருத்து தெரிவிப்பதற்கு அல்லது அது ஒரு உசிதம் அல்ல என்று நான் கருதுகின்றேன். அதே போன்றுதான் மாவட்ட நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கு சம்மந்தமாகவும் ஹன்சார்டிற்கு வெளியில் குழு ஒன்றை நியமித்து பேசலாம். கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் ஞாபகப்படுத்தினார்கள் நாம் மக்கள் பிரதிநிதிகள் ஊரில் இருக்கின்ற பிரமுகர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஊர் பிரச்சினைகள் சம்மந்தமாக எங்களுக்குள் ஒரு தனிப்பட்ட கலந்துரையாடலாக இருக்க வேண்டுமே தவிர ஒரு சபையினுடைய முடிவாகவோ அல்லது ஹன்சார்ட் இல் பதியக்கூடிய தீர்மானமாகவோ நீதிமன்றத்தில் இருக்கின்ற விடயத்தைப் பற்றி கதைப்பது அவ்வளவு சாலப் பொருத்தமானதாக இருக்க முடியாது என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, செப்டம்பர் 02ம் திகதி எங்களுக்கு அக்கரைப்பற்றில் AWF நிறுவனத்தின் ஊடாக செயலமர்வு ஒன்றுக்காக பெண் உறுப்பினர்கள் 04 பேருக்கு Tap கணனி கிடைக்கப்பெற்றது. எங்களுடைய Programme களை Zoom தொழில்நுட்பம் மூலம் கற்றுக்கொள்வதற்கு. ஆனால் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக எங்களுக்கு போக்குவரத்து வசதிகள் மிகவும் கஷ்டமான ஒரு நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் கௌரவ தவிசாளர் அவர்களை அணுகிய போது எங்களுக்கு வாகனம் தேவை என்று கேட்டவுடன் நீங்கள் உடனடியாக அதை எடுத்துச் சென்று உங்களுடைய வேலையை முடித்துவிட்டு வாருங்கள் என்று வாகனம் தந்தீர்கள். இதை அந்த Programme நடாத்துகின்ற அக்கரைப்பற்றில் இருக்கின்ற AWF நிறுவனத்தின் Project Coordinator ஆக இருக்கின்ற கமலபாணி அவர்கள் தனிப்பட்ட ரீதியில் உங்களுக்கு நன்றியை தெரிவித்ததாகவும் எங்களுடைய சபையை ஒரு முன்னுதாரணமான சபையாக எடுத்ததாகவும் உங்களுக்கு அந்த தகவலை எத்தி வைக்கவும் சொன்னார்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஏ.எம்.ஹனீபா என்பவர் மலையடி கிராமம் - 04 இல் இருந்து பாதை பிணக்கு சம்மந்தமாக முறைப்பாடு ஒன்று செய்திருக்கின்றார். நான் உங்களிடம் நேரடியாக வந்து சந்தித்து அது விடயமாக எத்தி வைத்த போது அதனை பார்க்க சென்று ஒரு பாதை விஷ வைத்தியர் வீதியில் இருந்து பௌஸி மாவத்தையில் சேருகின்ற பாதை. அதை ஒரு தனிநபர் தடுத்து வைத்திருக்கின்றார் இப்றாஹீம் மௌலவி என்பவர், அவர் தற்போது மதீனாவில் வசிப்பவர். அந்த விடயமாக பிரதேச செயலாளர் அவர்களுக்கு நான் நேரடியாக அதனை பார்வையிட்டு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தேன். பிரதேச செயலாளர் அவர்கள் குழு ஒன்றை நியமித்து அதனை பார்வையிட அனுப்பிய போது உண்மையிலே அந்தப் பாதை திறக்கப்பட வேண்டிய பாதை என்று தீர்மானம் எடுக்கப்பட்டு சென்ற பின்னர் அந்த வளவை பராமரிக்கின்றவர் அவரது மச்சினன் GS றகூல் என்பவர். அவரை பிரதேச செயலாளர் அவர்கள் அழைத்து காணிச் சட்டம் என்பது உங்களுக்கு தெரியுமா என்று கேள்வி எழுப்பி 30 வருடத்திற்கு மேற்பட்ட அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்டு இருக்கின்றது. அதில் இது வரைக்கும் எந்த அபிவிருத்தியும் செய்யவில்லை. மரக்கன்றுகள் நாட்டவில்லை, கட்டடங்கள் கட்டப்படவில்லை. நீர்ப்பாசனத்திற்கு சொந்தமான Reservation காணி அமைக்கப்பட்டிருக்கின்றது. 42 பேச்சஸ் இற்கு மேற்பட்ட வளவில் 25 பேச்சஸ் இற்குரிய பேமிட் தான் இருக்கின்றது.

குறைந்தது 05 அல்லது 10 வருடத்திற்கு மேல் அந்த வளவில் எந்த பராமரிப்பும் இல்லாமல்தான் அரசாங்கத்திற்கு சொந்தமானது என்பது உங்களுக்கு தெரியுமா? என்று அவரிடம் கேட்டுக் கொண்டு, நீங்கள் சென்று இந்தப் பிரச்சினையை அந்த ஒழுங்கையை எடுத்துக் கொடுங்கள் என்று சொல்லியும்

பிரதேச செயலாளரின் பேச்சைக்கூட மதிக்காமல் அவர் உடனடியாக மறுநாள் அந்தப் பாதையை குறுக்கறுத்து கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்தார். இதை அறிந்த பிரதேச செயலாளர் அவர்கள் அந்த பிரதேசத்து கிராம உத்தியோகத்தரை அனுப்பி தடுக்க சென்ற இடத்தில் அவர்கள் தாக்குவதற்கு முயற்சித்தார்கள். கிராம உத்தியோகத்தர் பிரதேச செயலாளருக்கு தொலைபேசி அழைப்பு மூலம் பேசிய போது சொன்னார் பொலீஸ் நிலயத்தில் சொல்ல சொன்னார். கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் தன் மக்களால் 03ம் மாதம் 25ஆந் திகதி இது சம்மந்தமாக முறைப்பாடு செய்திருக்கின்றார்கள். இதை கவனத்திற் கொண்டு நாம் எல்லோரும் ஒரு தீர்மானத்தை எடுத்து இந்த பாதையை திறந்து வைக்க வேண்டும் என்கின்ற ஒரு தீர்மானத்தை எங்களுடைய பிரதேச செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

அங்கு மக்களுடைய தேவை பௌஸி மாவத்தையில் இருக்கின்ற மாணவர்கள் அல் அர்ஷத் பாடசாலைக்கு செல்வதற்கான இலேசான பாதை. அங்கே நீர்ப்பாசனத்திற்குரிய வாய்க்கால் இருக்கின்றது. அதற்கு Reservation 15 அடி இருக்கின்றது. Surveyor அவர்களை சந்தித்து வினவிய போது, நீர்ப்பாசனத்திற்கு நிச்சயமாக 15 அடிக்கு மேற்பட்ட பாதை இருக்கின்றது. நீங்கள் பாதையை எடுக்கலாம் என்று சொன்னார். இதை தருவதற்கு அவர்கள் தடுக்கின்றார்கள். இந்த சபையின் ஏகமனதான ஒரு தீர்மானத்தை எடுத்து பிரதேச செயலாளருக்கு உடனடியாக பாதையை திறந்து வைப்பதற்குரிய ஆவணை செய்கின்ற ஒரு கடிதத்தை அனுப்பி வைக்க வேண்டும். அத்தோடு எங்களுடைய TC Quarters வீதி HNB இற்கு முன்னால் இருக்கின்றது. அதில் இருக்கின்ற மக்கள் முறைப்பாடு செய்திருக்கின்றார்கள். அதற்கான நிதியை ஒதுக்கி வைத்திருக்கின்றேன். அந்தக் கட்டடமும் நீதிமன்றத்தில் வழக்கு பேசுவதையும் பாதையை செய்ய முடியாது என்ற வகையில் வழக்கு பேசியவர்கள் தடுத்தார்கள். நானும் அந்த இடத்திற்கு சென்றேன். கௌரவ தவிசாளர் அவர்கள், நமது சக உறுப்பினர்கள் எல்லோரும் அங்கே சென்று ஒரு சமரசத்தோடு நீதிமன்ற தீர்ப்பு வந்ததற்கு பின்னர் உங்கள் எல்லை எதனால் வந்தாலும் உடைத்து தருகின்றோம். இப்போது பாதையை போடுவதற்குரிய அனுமதியை தாருங்கள் என்று அந்த பாதையை நிர்மாணம் செய்வதற்கு ஆவண செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, மலையடி – 04 எனது பிரதேசம். அதன் பிரச்சினை எனக்கும் விளங்கும். இவர்கள் அவரின் வளவின் நடுவால் கேட்கின்றார்கள். அந்த வளவுக்காரர்கள் கூறுகின்றார்கள் அருகில்தான் Reservation வடிகாண் இருக்கின்றது. எனது வளவின் பக்கத்தில் மற்றவர் வீடு கட்டிவிட்டார். Reservation 02 பக்கத்திற்கும் தான் வரும். அவர் சொல்கின்றார் நான் தடுக்கவில்லை வீதி போடுவது என்றால் பக்கத்தால் போடுங்கள் நடுவினால் தரமாட்டேன் என்பதுதான் அவரது ஆதங்கம். இதை சபை உறுப்பினர்கள் அனைவரும் சென்று பார்க்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பாதைப் பிரச்சினை உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விடயம். நான் அடிபட்டு நீதிமன்றத்திற்கும் சென்று நீதிமன்ற தீர்மானம் எடுக்கும் போதும் சபையால் யாரும் எனக்கு அந்த நேரத்தில் உதவி செய்யவில்லை. நானாகவே கைகட்டி நிற்க வேண்டிய நிலை. உண்மையிலே நான் பிறப்பதற்கு முதல் இருந்து அந்த பிரதேசத்திற்கு கல் போட்டு உறுதி வழங்கப்பட்டு அந்த பிரதேசத்தின் படம் இருந்தும் வடிகானை மறித்து கட்டடம் கட்டும் போது நான் தனிப்பட்ட ரீதியிலோ உங்கள் ஊடாகவும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் M.M.M.முஸ்தபா அவர்களுக்கு அழைப்பு விடுத்து எத்தனையோ தடவை கூறியும், உரிய முறையில் தடுக்காமல் என்னைக் கண்டு தடுத்துவிட்டு இவளுக்கு பைத்தியம். என்னிடம் தொலைபேசி மூலம் தொழில்நுட்ப உத்தியோகத்தர் M.M.M.முஸ்தபா அவர்கள் கேட்டார் உங்களுக்கு மட்டும் தானா தடுப்பதற்கு தேவை மற்ற உறுப்பினர்கள் எல்லாரும் இருக்கின்றார்கள் தானே அவ்வாறு வஞ்சிக்கப்பட்டவள்.

ஆனால் சட்டப்படி பார்த்தால் வடிகானை எடுத்து வடிகானுக்கு பக்கத்தில் Reservation ஊடாகத்தான் பாதை செல்ல வேண்டும். ஒருவரின் வளவின் நடுவில் சென்று வாதாடுவதை விட ஏன் அரசாங்கத்திற்கு சொந்தமான நீர்ப்பாசனத்திற்கு சொந்தமான காணி இருக்கும் போது அந்த பாதையை திறக்க இயலாது. இன்றைக்கு கிராம உத்தியோகத்தர்கள் ஒரு கௌரவ உறுப்பினரை

மதிப்பதில்லை. அதிலும் முக்கியமாக மலையடி 04 இல் இருக்கும் கிராம உத்தியோகத்தருக்கு கௌரவ உறுப்பினர் என்றால் ஒழுக்கமற்று கதைக்கின்றார்கள். என்ன என்று கேட்பதற்கு கூட எங்களுக்கு மரியாதை அற்று போகின்றது. இந்த நிலையில் நான் உண்மையிலே கௌரவ உறுப்பினர் அவர்கள் பின்னுக்கு வந்து நிற்கும் போது நான் வெளியில் செல்லவில்லை. ஏனென்றால் மரியாதை அற்ற இடத்திற்கு போகக்கூடாது என்று, அந்தளவுக்குதான் இந்த சபையில் இருக்கும் சில உத்தியோகத்தர்களும் நடந்து கொள்கின்றார்கள். தயவு செய்து எத்தனையோ தடவை இதைப்பற்றி சொல்லி இருக்கின்றேன். நீங்கள் கௌரவ தவிசாளர், உப தவிசாளர் உட்பட இதில் இருக்கும் சகல உறுப்பினர்களும் அந்த படத்தின் பிரகாரம் அந்த வடிகானை பார்க்க வேண்டும். நான் இந்த வடிகான் பிரச்சினையை ஏற்படுத்துவேன். அந்த வடிகான் அடைக்கப்பட்டால் எங்களுக்கு பின்னுக்கு எல்லோருக்கும் பிரச்சினை. வடிகானை திறக்க வேண்டும் வடிகான் ஊடாகத்தான் அந்தப் பாதை செல்ல வேண்டும். கட்டடம் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கும் போது அதற்கு இடம் விடாமல் அடுமதி கொடுத்த உத்தியோகத்தர் யார்? தவறான முறையில் அனுமதி வழங்கப்படுகின்றது.

இது போன்று இந்த சட்டதிட்டங்களுக்கமைய எந்த விடயமானாலும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உண்மையிலே மலையடி 03, 04 இற்கு எங்களது வீதிக்கு அனுமதி வழங்குவதானால் பிரதேச செயலாளர் அனுமதி எடுக்க வேண்டும். நீர்ப்பாசன அனுமதி எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் ஒரு வளைவில் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கின்றார்கள். எத்தனை அடி விட வேண்டும் என்று இல்லாமல் இதை எவ்வாறு கருத்திற் கொள்வது. பிரதேச சபை பார்த்த வேலை என்று சொல்கின்ற அளவுக்கு இல்லாமல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை எடுத்து எங்கள் ஊடாக கூட்டம் வைத்து இது எந்த அடிப்படையில் கொடுத்தோம் என்று வேண்டும். நாங்கள் பிரதேசத்தின் பிரச்சினை என்று File கேட்டால் அதை தருவதற்கு மறுக்கின்றார்கள். காரணம் தெரிய வேண்டும். நான் உறுப்பினரை விட்டு வெளியேறினால் எல்லோரும் கோபப்படும் அளவுக்கு சட்டதிட்டமாக கூறிக் கொள்கின்றேன். நான் நடவடிக்கை எடுப்பேன். உத்தியோகத்தர்களுக்கும் நடவடிக்கை எடுப்பேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இதில் நாம் விளங்க வேண்டியது இந்தப் பிரச்சினை கௌரவ உறுப்பினர் சரீபா அவர்கள் கூறியது போல் பிரதேச செயலகத்தினால் மட்டும் இயங்க இயலாது. நீர்ப்பாசன திணைக்களத்திற்கு பெரிய ஒரு சரித்திரம் இருக்கின்றது. அவை எல்லாம் மறைக்கப்பட்டுள்ளது. எத்தனையோ வடிச்சல் வாய்க்கால்கள் மூடப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் அவர் அவரின் வளவின் நடுவினால் செல்கின்ற வாய்காலை இல்லாமலாக்க வேண்டும் என்று மூடிய சரித்திரமும் இருக்கின்றது. இதில் அவ் வட்டாரத்து உறுப்பினர், ஏனைய உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து ஒன்று விளங்க வேண்டும் பிரதேச சபையினால் எல்லா வேலைகளையும் செய்ய முடியாது. தவிசாளர் நினைத்தால் செய்யலாம் என்பதை நீங்களும் சொல்லாதீர்கள். அடுத்த முறை தேர்தல் கேட்டாலும் கேட்காவிட்டாலும் வந்தாலும் வராவிட்டாலும் சட்டப்படி நாம் இயங்க வேண்டும். அரச காணிக்கு சொந்தக்காரர் GA / DS அவர்கள் தான். அவர்களுக்கு உதவுவதுதான் நமது கடமை.

உண்மையாக இந்தப் பிரச்சினைகளுக்கு காரணம் அரச உத்தியோகத்தர்கள் அவர்களின் கடமைகளை செய்யும் போது மற்ற நிறுவனங்களையும் அந்த முடிவுகள் பாதிக்கும் என்று எடுக்காமல் செய்வது. பிரதேச செயலாளருக்கு அரச காணி சொந்தமாக இருந்தாலும் அது குடியிருப்பு காணியாக மாறி குடியிருப்பு வருகின்ற போது அவற்றுக்கு அனுமதி கொடுக்க வேண்டியது பிரதேச சபை. மதில் கட்டுவது என்றாலும், வீடு கட்டுவது என்றாலும் பிரதேச சபை அனுமதி கொடுக்க வேண்டும். இதை ஒருவரும் பார்ப்பதில்லை. அனுமதி இல்லாமல் நடப்பதனால்தான் இந்தப் பிரச்சினை வருகின்றது. அந்த பிரதேசத்து மக்கள் ஒருவரும் அனுமதி எடுத்து மதில் கட்டுவது இல்லை. அதனால்தான் வடிச்சல் பிரச்சினை வருகின்றது. இந்த விடயங்களில் அந்த வட்டாரத்தின் கௌரவ உறுப்பினர்கள், அந்த வட்டாரத்தில் வாழ்பவர்கள் எல்லோரும் சேர்ந்து நாம் நமது கருத்துகளை கொடுக்கலாம். முடிவு எடுக்க வேண்டியவர் பிரதேச செயலாளர். அதன் பின் அதை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் உதவலாம்.

கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களை பொருத்தவரையில் அவர் பொதுத் தேர்தல் கேட்டதனால் அரச பிரதிநிதி என்றபடியினால் எல்லோரும் அவரிடம் செல்கின்றார்கள். அவர் அதை தீர்க்க

முயல்வது அவரது அரசியலில் ஒரு பங்கு. ஆனால் அதில் சபை உறுப்பினராக சக உறுப்பினர்களையும் சேர்த்து செல்வதனால் உங்களுக்கு தைரியம் அதிகம். நீங்கள் கொண்டு வந்து அவர்கள் எதிர்த்தால் ஒன்றும் செய்ய இயலாது. நீங்கள் எல்லோரும் எமது அனுபவமுள்ள உப தவிசாளர் இருக்கின்றார் அவரின் தலைமையில் குழு ஒன்றை உருவாக்கி அங்கத்தவர்களையும் சேர்த்து பிரச்சினைகளை பார்க்க வேண்டும். நான் செயலாளரிடம் கூறுகின்றேன் எல்லா File களையும் எடுத்து அவற்றை படித்து பிரதேச செயலாளருடன் கதைத்து நமக்கு சபையால் என்ன செய்யலாம். இங்கு அதிகமாக வருகின்ற பிரச்சினை தவிசாளர் நேரடியாக தலையிடுவதில்லை என்று, அதற்கு ஒரு காரணம் இவை எல்லாவற்றுக்கும் சட்டம் இருக்கின்றது. அதற்குரிய உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்கள்.

நாம் நமது 04 வருடம் முடிந்த சென்றுவிடுவோம். அதற்கு பின்னர் மறுமொழி கூற வேண்டியது தவிசாளர் சொன்னார் அவர் சொல்லி செய்தது என்று எந்த தீர்மானமும் எடுக்கவில்லை. அவர்களை எழுத வைத்து நியாயப்படுத்தி செய்திருக்கின்றேன். மர்சூக்காவின் விடயத்தில் நான் பிழையான முறையில் வழிநடாத்தப்பட்டு ஒரு COC வழங்கப்பட்டது. அதற்கு பின்னர் ஒரு குழுவை நியமித்து COC இல்லாமலாக்கப்பட்டது. நாம் நீதியைத்தான் செய்யலாம். அவர்களின் குடும்பப் பிரச்சினைகள் அதனால் வந்தவைகள் எல்லாம் நானும் அறிகின்றேன். அவருக்கு வழி இருக்கின்றதா இல்லையா என்பதை தீர்மானிப்பது பிரதேச செயலாளர். அவர் சொல்வதைத்தான் நாம் நடைமுறைப்படுத்தலாம். அதில் பிழை செய்திருந்தால் பிழையை நிவர்த்தி செய்ய வேண்டும். பிழை செய்து விட்டோம் என்று இருக்க இயலாது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஹனீபா என்பவரின் பிரச்சினைக்கு அவர் உடனடியாக வட்டாரத்தின் உறுப்பினர் என்ற படியினால் Call எடுத்து எனது பக்கம் Reservation இருக்கின்றது. வழி விட வேண்டும் என்றால் மற்ற பக்கத்தில் இருப்பவரும் தந்தால் நான் விடுவதற்கு தயார். ஆனால் நடுவினால் இல்லாமல் பக்கத்தால் விடுவேன். அத்தனை வாய்க்காலுக்கும் Reservation இருக்கின்றது. வீராகொட வில் இருந்து கைகாட்டி வரைக்கும் எவ்விடத்தில் வாய்க்கால் இருக்கின்றது, எந்த இடத்தில் Reservation இருக்கின்றது, எத்தனை ஏக்கர் எத்தனை ஏக்கர் எடுத்திருக்கின்றார்கள் என்பதும் எனக்கு தெரியும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உப தவிசாளரின் தலைமையில் கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி, கௌரவ உறுப்பினர் முஸ்தபா, கௌரவ உறுப்பினர் சஹீல், கௌரவ உறுப்பினர் பௌசுள்ளாஹ், கௌரவ உறுப்பினர் றியாஸ், கௌரவ உறுப்பினர் நளீம், கௌரவ உறுப்பினர் அஸ்பர் மற்றும் உரிய வட்டாரத்து உறுப்பினர்களையும் உள்வாங்கி இப் பிரச்சினைகளை ஆக்கபூர்வமாக பார்த்து அந்த குழு என்ன தீர்மானம் எடுக்கின்றதோ அதை சட்டத்துக்குள் செய்யலாம் என்றால் அதை செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உடங்கா-02 தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பீடத்திற்கு அருகாமையில் இருக்கின்ற பாரிய குழியினை நிரப்பியது தெரியும். கௌரவ தவிசாளர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். அந்த அடிப்படையிலே இப்போது அந்த இடத்தினை பராமரிக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு அவசியம் என உணர்கின்றேன். நாங்கள் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் அந்த இடத்தை அழகான சூழல் மிக்க பிரதேசமாக அலங்கரிக்க வேண்டும் என்ற எண்ணப்பாடு எங்களுக்கு இருந்தாலும் அண்மையிலே ஓர் இரு தினங்களுக்கு முன்னர் 5 மெசின் அளவில் குப்பைகள் கொட்டப்பட்டிருந்தது. விலங்குகளை அறுக்கின்ற எச்சங்களை கூட அந்த இடத்தில் போடுவதை காணக்கூடியதாக இருக்கின்றது. அந்த இடம் மீண்டும் அசிங்கமான இடமாக மாறாமல் நாங்கள் எங்களுடைய கண்காணிப்பிலே ஊழியர் ஒருவரை நியமித்து அதனை ஒரு அழகான பிரதேசமாக மரங்கள் வளர்த்து அதனை சுற்றி வேலி அமைப்பதற்கான அனுமதியினை சபை வழங்கி அந்த இடத்தை ஒரு அழகான இடமாக பொது மக்களுக்கு அமைக்க வேண்டும் என்பது எமது அவா. அதனை இச்சபை பொறுப்பெடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று வேண்டி விடைபெறுகின்றேன்.

**தீர்மானம் - 04/43/09**

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் உள்ள நிலத்தினை சுற்றி தற்காலிக வேலி ஒன்றை அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம்.சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் கூறிய பாதை உண்மையாக நமது சபையால் கட்டப்பட்ட கட்டடம். அந்த ஆவணங்களையும் தேடி எடுக்க வேண்டும். தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் கேட்ட போது அப்படியான ஒரு ஆவணமும் இல்லை என்று சொன்னார்கள். குறிப்பிட்ட கட்டடம் நிர்மாணித்தவர்களிடம் கேட்ட போது அவை எல்லாவற்றையும் அழித்து விட்டார்கள் என்று கூறுகின்றார்கள். நமது காலத்திற்குள் அதற்கு ஒரு தீர்வு இல்லை என்றால் நிச்சயமாக அதற்கு எந்த ஒரு தீர்வும் வராது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த குழுவோ அதை பார்த்து செய்யலாம் என்று கூறி, சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை